**STARTING TIME 11.32 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 29/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Gr. II Bench Clerk of this court, on 09.12.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **தனலட்சுமி** Husband Name :

Address :

Calling : Age :

**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**12. வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் சார்வான தாவாவின் நகலில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான் என்றால், சரிதான். அந்த சார்வான தாவாவின் நகல் பி.வா.சா.ஆ 1–ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் உள்ள அசல் தாவாவில் கேட்டுள்ள விளம்புகை பரிகாரங்கள் எதுவும் பி.வா.சா.ஆ–1 சார்வான நகலில் இல்லை என்றால், சரிதான்.**

**13. இவ்வழக்கில் முதலில் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த போது அந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 109/2015 என்றால், சரிதான். அவ்வழக்கு பின்னிட்டு இந்நீதிமன்றத்தில் மாற்றப்பட்டு இந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 29/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.**

**14. நான் கையெழுத்து ஆங்கிலத்தில் செய்வேனா என்றால், அதிகமாக**

தமிழில் தான் செய்வேன், எப்போதாவது ஆங்கிலத்தில் செய்வேன். இவ்வழக்கு தாக்கல் செய்த போது அனைத்து கையெழுத்துக்களையும் தமிழில் தான் செய்தேன். அதற்கு முன்பு அனைத்து கையெழுத்துக்களையும் ஆங்கிலத்தில் செய்வேனா என்றால், அதிகமாக தமிழில் தான் செய்துள்ளேன், எப்போதாவது ஆங்கிலத்தில் செய்வேன்.

15. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 7 ல், 30.05.2003 ல் எழுதிய தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் என்னை ஒரு சாட்சியாக கையெழுத்து போட்டு உருவாக்கியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 30.05.2003 தேதியன்று எனது தாயார் மல்லிகா, எனது சகோதரி அமுதவள்ளிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் என்றால், சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து யாருடையது என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு என்னுடையது என சொல்கிறார். அந்த ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து யாருடையது என்றால், எனது கணவரின் கையெழுத்து ஆகும். 30.05.2003 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் **பி.வா.சா.ஆ–2** ஆகவும், அந்த ஆவணத்தில் உள்ள வாதியின் 1–வது சாட்சி கையெழுத்து **பி.வா.சா.ஆ–3** ஆகவும், 2–வது சாட்சி கையெழுத்து **பி.வா.சா.ஆ–4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

16. என்னிடம் காட்டப்படும் 30.05.2003 தேதியிட்ட ஆவணமானது, பி.வா.சா.ஆ–2 ஆவணம் எழுதிய அதே தேதியில் 2–ம் பிரதிவாதி பெயருக்கு நான் கையெழுத்து செய்து எழுதி கொடுத்த ஆவணம் என்றால், சரிதான். 30.05.2003 அன்று வாதியால் 2–ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்படாத ஆவணம், **பி.வா.சா.ஆ–5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17. பி.வா.சா.ஆ–2 தான செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிய சமயத்திலேயே அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியும் என்றால், சரியல்ல, அப்போது பட்டா மாற்றம் செய்ய வேண்டும் என்று சொல்லிதான் கையெழுத்து வாங்கினார்கள்.

யார் பெயருக்கு பட்டா மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள் என்றால், என் பெயரிலும், 1, 2 பிரதிவாதிகள் பெயரிலும் மாற்ற வேண்டும் என்று சொன்னார்கள்.

18. பி.வா.சா.ஆ–2 ஆவணம் எழுதிய 2003ம் ஆண்டிலிருந்து வழக்கு தாக்கல் செய்த 2015ம் ஆண்டுவரை என் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால், இதுநாள்வரை மாறவில்லை. எனவே, பி.வா.சா.ஆ–3 சாட்சி கையெழுத்தை என் தாயார் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்திற்காக வேண்டி தான் செய்துள்ளேன் என்றும், நான் சொல்வதுபோல், பட்டா மாற்றம் செய்வதற்காக வேண்டி போடவில்லை என்றால் சரியல்ல.

19. எனது தாயார் எழுதி வைத்த பி.வா.சா.ஆ–2 ஆவணத்தில் உள்ள சொத்தின் மதிப்பு 15000/– என சொல்லப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அதேபோல், எனது தகப்பனார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்திலும், மதிப்பு ரூ.15000/– என சொல்லப்பட்டுள்ளது என்றால், அதுபற்றியும் எனக்கு தெரியாது. எனவே, ரூ.15000/– + ரூ.15000/– மதிப்புள்ள சொத்துக்களுக்கு நான் ரூ.50000/– பெற்றுக்கொண்டு பி.வா.சா.ஆ–5 ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல, நான் பணம் எதுவும் வாங்கவில்லை.

20. பி.வா.சா.ஆ–2 ஆவணம் எழுதிய விவரம் எனக்கு அன்றைய தேதியிலேயே தெரியும் என்றும், அந்த செல்லாது என்ற பரிகாரத்தை 3 வருடத்திற்குள் கேட்காமல், 12 ஆண்டுகள் கழித்து காலம் கடந்து கேட்டுள்ளேன் என்றால், சரியல்ல.

21. தாவா எ– அட்டவணை சொத்தை விற்பனை செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்தையும் கேட்டுள்ளேன் என்றால், சரிதான். சி முதல் ஜி வரை அட்டவணையில் உள்ள சொத்துக்கள் தாவா எ– அட்டவணையின் 1வது அயிட்ட சொத்துக்களின் ஒரு பகுதி என்றால், சரிதான். எனவே, நான் வழக்கில் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமே

பயனற்றது என்றால், சரியல்ல.

22. தாவா எ–அட்டவணையில் உள்ள 4–வது அயிட்ட வீடானது எனது தகப்பனாருக்கு சொந்தமானது என்றால், சரிதான். அதில் எனக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் தலா 1/3 பாகம் உரிமை உள்ளது என்றால், சரிதான். தற்போது அந்த வீட்டில் யார் உள்ளது என்றால், 1– ம் பிரதிவாதி உள்ளார். நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் வேலூரில் குடியிருக்கிறேன். 2–ம் பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் என்றால், சென்னையில் குடியிருக்கிறார். எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் திருமணமான பிறகு நானும், 2ம் பிரதிவாதியும் கணவர் வீட்டில் வசித்து வருகிறோம் என்றால், சரிதான்.

23. எனது தகப்பனாருக்கு தாவா சொத்துக்கள் இல்லாமல், வேலூரில் வேறு சில சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் வேலூரில் உள்ள அந்த சொத்துக்களை சேர்க்கவில்லை என்றால், சரிதான், அந்த சொத்து சம்மந்தமாக எனது அப்பாவிற்கும் சித்தப்பாவிற்கும் இடையே வழக்கு நடந்து வந்து எனது அப்பாவிற்கு ஆதரவாக தீர்ப்பானது, அந்த நிலுவையில் இருந்த சமயத்திலேயே அந்த சொத்தை வேறு ஒரு நபர் கிரையம் பெற்றுவிட்டதால், அவர் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு தற்போது வரை நிலுவையில் உள்ளதால் அந்த சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. அதுசம்மந்தமாக இவ்வழக்கில் சொல்லி உள்ளேனா என்றால், சொல்லி உள்ளேன். அதுபோல் எதுவும் சொல்லவில்லை என்றால், சரியல்ல. 2–ம் பிரதிவாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்த போது அதற்கு மறுப்புரை தாக்கல் செய்த பிறகுதான் அதுபற்றி சொல்லி உள்ளேன் என்றால், சரிதான்.

24. எனது தகப்பனாரின் சொந்த ஊர் எதுவென்றால், திருத்தணி பக்கம் உள்ள முருக்கம்பட்டு கிராமம் ஆகும். எனது சித்தப்பா பெயர் என்னவென்றால், ஏழுமலை ஆகும். எனது சித்தப்பா நடத்தி வந்த நகை கடையில் 1ம் பிரதிவாதியான எனது அண்ணன் வேலை செய்து வந்ததாக எனது பிரமாண

வாக்குமூலத்தில் 9ம் பத்தியில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேலும், 1ம் பிரதிவாதி எனது சித்தப்பாவின் நகையை ஏமாற்றியதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். முருக்கம்பட்டு கிராமத்தில் எனது தகப்பனாருக்கு சொந்தமாக சொத்துக்கள் இருந்தது என்றால், சரிதான்.

25. முருக்கம்பட்டு கிராமத்தில் எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்கள் இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் இருந்ததா என்றால், எனக்கு 12 வயதிருக்கும் போதே 1ம் பிரதிவாதி எனது சித்தப்பாவின் நகைகளை ஏமாற்றிவிட்டதால், அதற்கு ஈடாக எனது தகப்பனார் முருக்கம்பட்டு கிராமத்தில் இருந்த சொத்தில் அவரது பாகத்தில் ஒரு பகுதியை எனது சித்தப்பாவிற்கு எழுதி கொடுத்துவிட்டார், மீதி சொத்து உள்ளது அது சம்மந்தமாக என் சித்தப்பாவிற்கும் என் அப்பாவிற்கும் பிரச்சனை இருந்தது. முருக்கம்பட்டு கிராமத்தில் உள்ள சொத்து சம்மந்தமாக வழக்கு எதுவும் நிலுலையில் இல்லை என்றால் சரிதான்.

26. முருக்கம்பட்டு கிராமத்தில் உள்ள எனது தகப்பனாருக்கு சொந்தமான மீதி சொத்தை இவ்வழக்கில் சேர்க்காததால், இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல, அந்த சொத்து சம்மந்தமாக எனது அப்பாவிற்கும், சித்தப்பாவிற்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்படவில்லை, அதனால் அந்த சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. அந்த சொத்தை இவ்வழக்கில் சேர்க்காததற்கு நான் சொல்லும் காரணம் ஏற்புடையது அல்ல என்றும், அந்த சொத்தையும் இந்த வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

ENDING TIME 12.25.P.M.

G YUVARAJ

Special Sub Judge, Arakkonam

Digitally signed by G YUVARAJ
Date: 2024.12.09 14:16:01 +0530